3rd March 1958]

**Sri K. PERIANNAN :** இலங்கை இந்தியா பிரச்னையால் பெரும் பாலும் பாதிக்கப்பட்டவர்கள் பிற்பட்ட இனத்தவர்களும், தாழ்த்தப் பட்ட இனத்தவர்களும்தான். அங்கிருந்து இங்கு வந்தவர்களில் பெரும் பாலும் அங்கு திரும்பிப்போக முடியாமல் இருக்கிறார்கள். அதனால் அவர் களுக்கு இந்த அரசாங்கம் ஏதாகிலும் உதவி செய்ய முன் வருவார்களா ? மேலும் ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் அந்த அரசாங்கத்துடன் கலந்து இப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இது வேறு விஷயம். இதைப்பற்றி தனியாக கேள்விபோட்டால் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி பதில் சொல்லலாம்.

**Sri A. V. P. ASAITHAMBI :** இலங்கையில் இருக்கிற தமிழர்கள் இந்தி யாவுடன் இணைய சம்மதித்திருக்கிறார்களா ? அதைப்பற்றிய பேச்சு அடிக்கடி கேட்கப்படுகிறதே, அதைப்பற்றிய தகவல் இந்த அரசாங்கத்திற்கு உண்டா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இந்தக் கேள்வியை அவர் கேட்பது சரியல்ல என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளு கிறேன். அனாவசியமாக விவகாரங்களில் தலையிட்டு சர்ச்சைக்கு எடுத்துக் கொள்வது சரியல்ல.

**Mr. SPEAKER :** இலங்கையைப்பற்றி இவ்வளவு கேட்பது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது.

**Sri N. R. THIAGARAJAN :** நான் சென்ற ஆண்டுதான் இலங்கை யிலிருந்து அகதியாக வந்திருக்கிறேன். பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி களைக் காப்பாற்றுவது போல் என்னையும் காப்பாற்றி அவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதியைப்போன்று எனக்கும் கொடுப்பார்களா என் பதை அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER :** இலங்கையிலிருந்து வந்தவர்களைப்பற்றி கேள்வி இருக்கும்போது பாகிஸ்தானைப்பற்றி கேள்வி கேட்பது சரியல்ல.

**Sri A. VEDARATHNAM :** இலங்கையிலிருந்து வந்த அகதிகள் வேலையின்றி மிகக் கஷ்டமான நிலையில் இருப்பதால் அவர்களை இங்கு தொழிற் துறையில் ஈடுபடுத்தி அவர்களுடைய கோரிக்கைகளை காலங் கடத்தாமல் ஆலோசனை செய்து விரைவில் ஓர் முடிவுக்கு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** காலம் ஆகிறது என்று சொல்வதற்கு கொஞ்சம் கூட இடம் இல்லை. எந்த எந்த துறையில் அவர்களை ஈடுபடுத்தமுடியுமோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. ரிப்போர்ட் வந்தபிறகு இந்த அரசாங்கம் முடிவு செய்யும் என்பதை கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

### *Tirupathi Devasthanam High School, Vellore*

* 179 *Q.*—**Sri P. U. SHANMUGAM :** Will the Hon. the Minister for Finance be pleased to state why the teachers of the Tirupathi Devasthanam High School, Vellore, are not paid the new enhanced dearness allowance?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** Instructions are being issued by the Director of Public Instruction to the management of the school to pay the enhanced dearness allowance to the teachers in the school.